


**07.07.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. 21ஆவது நூற்றாண்டின் முன்னேற்றம், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை சார்ந்தே இருக்கும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. விவசாயிகள் பயன்பெறும் வகையிலான ஆலோசனைகள் அதிக அளவில் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் வலியுறுத்தியுள்ளார்.

3. நாட்டு மக்களின் ஆரோக்கியத்தை நோக்கமாக கொண்டு ஆயுஷ்மான் பாரத் காப்பீடு சுகாதார திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

4. தமிழ்நாட்டில் அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் நடப்பு கல்வியாண்டில் 20 சதவிகிதம் கூடுதல் மாணாக்கர் சேர்க்கை இடங்கள் வழங்கப்படுவதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோவி செழியன் அறிவித்துள்ளார்.

5. இந்திய - இங்கிலாந்து இளையோர் அணிகளுக்கிடையிலான 5ஆவது இறுதி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி **Worcester-**இல் இன்று பிற்பகல் தொடங்குகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**********

<u>பிரதமர்</u>

21ஆவது நூற்றாண்டின் முன்னேற்றமும், மக்கள் நலமும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை சார்ந்தே இருக்கும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பிரேசில் ரியோடி ஜெனிரோவில் பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் உரையாற்றிய பிரதமர் நம் நாட்டின் வேளாண்மை, கல்வி, சுகாதாரம் ஆட்சி முறையில் செயற்கை நுண்ணறிவு இன்றியமையா பங்காற்றுவதாக குறிப்பிட்டார்.

தேவை, கொள்கைகள், ஸ்திரதன்மை, ஆரோக்கியமான கடன் பரிவர்த்தனைகளின் அடிப்படையில் பிரிக்ஸ் வங்கிகளின் வளர்ச்சி திட்டங்கள் அமைய வேண்டும் என்றார்.

முக்கிய கனிமங்கள், தொழில்நுட்பம் மற்றும் விநியோக சங்கிலியை சுய லாபத்திற்காக சர்வதேச நாடுகள் பயன்படுத்தக்கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதனிடையே பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள பிரிக்ஸ் நாடுகள் பயங்கரவாதத்தை அனைத்து நிலைகளிலும் எதிர்க்க உறுதி பூண்டுள்ளன.

இம்மாநாட்டின் ஒருபகுதியாக பிரதமர் மலேசியா, கியூபா, வியட்நாம் உள்ளிட்ட நாட்டுத்தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

**********

<u>ராஜ்நாத்சிங்</u>

நாட்டின் ராணுவ தளவாட உற்பத்தி திறன் ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதலின் போது வெளிப்பட்டதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு முகமை சார்பில் கணக்கு கட்டுப்பாட்டாளர்கள் மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், நம் நாட்டின் பாதுகாப்பு தொழிற்சாலைகளில் பெரிய அளவிலான வாய்ப்புகள் உள்ளதை சுட்டிக்காட்டினார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் பாதுகாப்பு துறையில் இந்தியா தற்சார்பு நிலையை எட்டியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தளவாடங்கள் நாம் நாட்டிலேயே தற்போது உருவாக்கப்படுவதாக பெருமிதம் தெரிவித்தார்.

அதி நவீன தொழில்நுட்பங்கள், உயர் நிலை திட்டங்களை நோக்கமாக கொண்டு ஆராய்ச்சி, திறன் மேம்பாட்டிற்காக மத்திய அரசு ஒரு லட்சம் கோடி ரூபாய் நிதி அனுமதித்திருப்பதை திரு.ராஜ்நாத்சிங் எடுத்துரைத்தார்.

**********

<u>சிவ்ராஜ்சிங் சவ்ஹான்</u>

நாட்டில் மக்காச்சோளம் உற்பத்தியை அதிகரிக்க ஒருங்கிணைந்த அணுகுமுறையின் அவசியத்தை மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் வர்த்தக தொழிற்கூட்டமைப்பு சார்பிலான மக்காச்சோள உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், மத்திய மாநில அரசு, விஞ்ஞானிகள், விவசாயிகள், வேளாண் பல்கலைகழகங்கள் தொழிற்சாலைகள் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

“ஒரே தேசம் ஒரே வேளாண்மை”

“ஒரே விவசாயம், ஒரே குழு” என்ற நோக்கத்துடன் வேளாண்மைக்கான குழு கட்டமைக்கப்பட வேண்டும் என்றார்.

விவசாயிகள் பயன்பெறும் வகையிலான பரிந்துரைகள் மற்றும் விரிவான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

**********

எல்.முருகன்

ஆயுஷ்மான் பாரத் சுகாதார காப்பீடு திட்டங்கள் அனைத்தும் நாட்டு மக்களின் ஆரோக்கியத்தில் பிரதமர் திரு.நரேந்திரமோடி கொண்டுள்ள அக்கறையை புலப்படுத்துவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

சென்னையில் ESI ஊழியர் நல மருத்துமனை நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர் நல வாழ்வு மையங்கள், மக்கள் மருந்தகங்கள் போன்றவற்றை சுட்டிக்காட்டினார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் ஆட்சியில் மருத்துவ கல்லூரி கட்டமைப்பு அதிகரித்ததோடு, 75 ஆயிரம் புதிய மருத்துவ இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தற்போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மருத்துவ கல்லூரி இருப்பதோடு, அவற்றில் உள்ள மருத்துவ இடங்களும் அதிகரிக்கப்பட்டு வருவதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

2014ஆம் ஆண்டிற்கு முன்னர் நாட்டில் 7 எயிம்ஸ் மருத்துவமனைகள் மட்டுமே இருந்த நிலையில் தற்போது 15 எயிம்ஸ் மருத்துவமனைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

**********

முதலமைச்சர் விடுதி

தமிழ்நாட்டில் பள்ளி கல்லூரி மாணாக்கர் விடுதிகள் இனி சமூக நீதி விடுதிகள் என அழைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் எதிர்கால சமுதாயத்தை சமத்துவ சமூகமாக உருவாக்கும் வகையில் இந்நடவடிக்கை என்றார்.

இருப்பினும் மாணாக்கருக்கான சலுகைகளில் எவ்வித மாற்றமும் இருக்காது என்று தெளிவுபடுத்தினார்.

இதனிடையே மாநிலத்தில் SC ST விடுதிகளின் தரம் பரிதாப நிலையில் உள்ளதாக மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இவ்விடுதிகளை முதலமைச்சர் முதலில் பார்வையிட வேண்டும் என்று தமது சமூக வலைதள பதிவில் அவர் கூறியுள்ளார்.

**********

முதலமைச்சர் - வீடுகள்

தமிழ்நாட்டில் வருவாய் பேரிடர், மறுவாழ்வு மற்றும் பொதுத்துறை சார்பில் 93அரை கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட கட்டிடங்களை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

சென்னை தலைமை செயலகத்தில் இருந்து காணொலி வாயிலாக விழுப்புரம், திருப்பூர், தர்மபுரி விருதுநகர் மாவட்டங்களின் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 729 வீடுகளையும் திறந்துவைத்தார்.

தர்மபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டிடம், வட்டாச்சியர் அலுவலக கட்டிடங்கள் உள்ளிட்டவையும் இதில் அடங்கும்.

**********

<u>அரசாணை</u>

தமிழ்நாடு முழுவதும் சாலை மற்றும் மேம்பால பணிகளுக்கான 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது.

14 புறவழிச்சாலைகள் அமைக்க ஆயிரத்து 713 கோடி ரூபாயும், ஆற்றுப்பாலங்கள், மழைநீர் வடிகால், சாலை விரிவாக்க பணிகளுக்கு 250 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**********

<u>கோவி செழியன்</u>

தமிழ்நாட்டில் அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் நடப்பு கல்வியாண்டில் 20 சதவிகிதம் கூடுதல் மாணாக்கர் சேர்க்கை இடங்கள் வழங்கப்படுவதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோவி செழியன் அறிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசு உதவிபெறும் கலை அறிவியல் கல்லூரிகளுக்கு 15 சதவிகித இடமும் சுய நிதி கலை அறிவியல் கல்லூரிகளுக்கு 10 சதவிகித இடமும் கூடுதலாக உயர்த்தி வழங்கப்பட இருப்பதாக குறிப்பிட்டார்.

கல்லூரிகளில் சேர்க்கைக்காக அதிக அளவில் மாணாக்கர் விண்ணப்பித்து காத்திருப்பதை அடுத்து இந்நடவடிக்கை என்றார்.

மாணாக்கர் இந்த வாய்ப்பை பயன்படுத்தி முன்னேற அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

**********

<u>பொறியியல்</u>

தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகளுக்கான கலந்தாய்வு இணையவழியில் இன்று தொடங்கியது.

சென்னை அண்ணா பல்கலைகழகத்தின் கீழ் செயல்படும் 445 அரசு, தனியார் பொறியியல் கல்லூரிகளில் **BE., B.Tech** படிப்புகளுக்கு இரண்டு லட்சம் இடங்கள் இக்கலந்தாய்வு மூலம் நிரப்பப்பட உள்ளன.

அரசு பள்ளி மாணாக்கருக்கான ஏழரை சதவிகித உள் ஒதுக்கீடு,

மாற்றுத்திறனாளி, விளையாட்டு பிரிவினர், ராணுவ வீரர்களின் வாரிசுகள் உள்ளிட்ட சிறப்பு பிரிவு மாணாக்கருக்கான கலந்தாய்வு இன்று முதல் வரும் 11ஆம் தேதிவரை நடைபெறுகிறது..

பொதுப்பிரிவு மாணாக்கருக்கான கலந்தாய்வு வரும் 14-ம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 19-ம் தேதிவரை நடைபெற உள்ளது.

**********

## <u>அன்பில் மகேஷ்</u>

தமிழ்நாட்டில் தனியார் பள்ளிகள் இயக்ககம் சார்பில் தமிழ் ஆசிரியர்களுக்கான புத்தாக்க பயிற்சியை மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி சென்னையில் இன்று தொடங்கிவைத்தார்.

தனியார், சுய நிதி, பிற வாரிய பள்ளிகளின் தமிழ் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்க, முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இதன் முதற்கட்டமாக ஆயிரத்து 200 ஆசிரியர்களுக்கு இன்று சென்னையில் பயிற்சி தொடங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**********

## <u>மகளிர் உரிமை தொகை</u>

தமிழ்நாட்டின் கடைகோடி பகுதி மக்களின் வசிப்பிடங்களுக்கு அரசின் திட்டங்கள் நேரடியாக சென்றடைய வகை செய்யும் சிறப்பு திட்டத்தை முதலமைச்சர் வரும் 15ஆம் தேதி சிதம்பரத்தில் தொடங்கிவைக்கிறார்.

இதற்காக மாநிலம் முழுவதும் வீடு வீடாக விண்ணப்ப விநியோகம் செய்யும் பணிகள் இன்று தொடங்கின.

ஒரு லட்சம் தன்னார்வலர்கள், இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பொதுமக்கள் தங்கள் இல்லங்களுக்கு வரும் தன்னார்வல்களிடம் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து தேவையான ஆவணங்களை இணைத்து சிறப்பு முகாம்களில் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகின்றனர்.

மகளிர் உரிமை தொகை உள்ளிட்ட 43 சேவைகள் இதன் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு அறிவித்துள்ளது.

**********

## <u>எடப்பாடி</u>

தமிழ்நாட்டில் அஇஅதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அத்திக்கடவு அவிநாசி திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்படும் என்று கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் வரும் சட்டப்பேரவை தேர்தல் ஒட்டி தேர்தல் பிரச்சார பயணத்தை இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

விவசாயிகள் நெசவாளர்கள் செங்கல் உற்பத்தியாளர்களுடன் அவர் கலந்துரையாடினார்.

**********

டிடி

பிரசார் பாரதியின் டிடி தமிழ் தொலைகாட்சியில் மண்டல செய்தி பிரிவு சார்பில் தமிழ் செய்தி வாசிப்பாளர்கள், தமிழ், ஆங்கிலம், ஹிந்தி செய்தியாளர்கள், புகைப்பட கலைஞர்கள் உள்ளிட்ட தற்காலிக பணியாளர் பணியிடங்களுக்கு தகுதியுடையவர்கள் இணையதளத்தில் வரும் 25ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**********

நாகை

நாகை மாவட்டத்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள புத்தகத்திருவிழாவை ஒட்டி மாணவர்கள் புத்தகங்கள் வாங்கி பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

**********

திருவாரூர்

கைபேசிகளை அதிகளவில் பயன்படுத்துவது போதை பழக்கத்திற்கு நிகரானது என திருவாரூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மனநல மருத்துவர் இந்து பிரியதர்ஷிணி மாணாக்கரிடையே பேசுகையில் தெரிவித்தார்.

.. வாய்ஸ் ..

கோவில்

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் குடமுழுக்கு இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

மயிலாடுதுறை மாவட்டம் திருவெண்காடு அருள்மிகு ஸ்வேதாரண்யேஸ்வரர் திருக்கோவில் கும்பாபிஷேகம் இன்றுகாலை நடைபெற்றது.

**********

கிரிக்கெட்

இந்திய - இங்கிலாந்து இளையோர் அணிகளுக்கிடையிலான 5ஆவது இறுதி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி **Worcester**-இல் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரை இந்தியா 3-1 என்ற கணக்கில் ஏற்கனவே கைப்பற்றியுள்ளது.

**********

## <u>டென்னிஸ்</u>

விம்பிள்டன் கிராண்ஸ்லாம் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி அமெரிக்காவின் ராபர்ட் இணை - ஸ்பெய்னின் **Marcel,** அர்ஜென்டினாவின் **Horacio** இணையை இன்று எதிர்கொள்கிறது.

**********